திி/திி/புனித மரியாள் கல்லூரி
(தேசிய பாடசாலை)
மூன்றாம் தவணைப் பரீட்சை- 2022
தமிழ் மொழியும் இலக்கியமும்

தரம் - 9 பகுதி – 01 நேரம் - 2.00 மணித்தியாலம்

சுட்டெண் :……………………….

<u>சரியான விடையின் கீழ் கோடிடுக.</u>

1) அகத்தில் ஒளி துலங்கிட வேண்டும். இங்கு அகம் என்பது,
1.வீடு 2.உள்ளம் 3.மனை 4.உள்

2) ‘‘என்றும் அழியாத தர்மம் இறுதியில் வெல்லக் காண்போம்’’ இங்கு தர்மம் என்பதன் ஒத்தசொல்
1.அதர்மம் 2.அறம் 3.மறம் 4.வீரம்

3) ‘‘:ஔவையார் மன்னர்களின் பேராதரவைப் பெற்றவர் என்பதில் ஐயமில்லை’’ இங்கு ஐயம் என்பதன் எதிர்பதம்
1.சந்தேகம் 2.தெளிவு 3.மகிழ்ச்சி 4.பொறாமை

4) உண்மையும் உயர்வும் போற்றப்பட்டது. இங்கு உயர்வு என்பதன் எதிர்கருத்து
1.இழிவு 2.பதிவு 3.தாழ்வு 4.உயர்ச்சி

5) ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல பசு மேய்ப்பவன்.
1.பாகன் 2.வலவன் 3.ஆயன் 4.தேவன்

6) பனையிற்கு நுங்கு போல பலாவிற்கு,
1.குரும்பை 2.மூசு 3.வடு 4.கச்சல்

7) பின்வருவனவற்றுள் இணைமொழியாக அமையாதது
1.அல்லும் பகலும் 2.பென்னம் பெரிய 3.அக்கம் பக்கம் 4.மேலும் கீழும்

8) ஆணழகன் என்பது எவ்வகை புணர்ச்சி
1.இயல்பு புணர்ச்சி 2.தோன்றல் விகாரம் 3.திரிதல் விகாரம் 4.கெடுதல் விகாரம்

9) கைவருதல் என்ற மரபுத் தொடரின் பொருள்
1.கை கொடுத்தல் 2.கை வைத்தல் 3.தேர்ச்சி பெறல் 4.செய்து முடித்தல்

10) பின்வருவனவற்றுள் தன்வினை அல்லாதது
1.நனைத்தான் 2.எடுத்தான் 3.உண்டான் 4.படித்தான்

11) சின்னப் பையன் விரைவாக ஓடினான். இதில் வந்துள்ள பெயரடை
1.சின்ன 2.பையன் 3.விரைவாக 4.ஓடினான்

12) கமலன் விரைவாக ஓடி நடந்தான். இவ் வாக்கியத்தின் செயற்படுபொருள்
1.கமலன் 2.விரைவாக 3.ஓடி 4.எதுவும் இல்லை

13) குதிரை காற்றிலும் கடுகிச் சென்றது. இதில் வந்துள்ள அணி
1.உவமையணி 2.உருவக அணி 3.உயர்வு நவிற்சியணி 4.தற்குறிப்பேற்ற அணி

14) ஒரு நூலை அச்சிட்டு வெளியிடுவோர் தவிர்ந்த பிறரால் வழங்கப்படும் சிறப்புரை
1.அணிந்துரை 2.பதவுரை 3.நூலுரை 4.முன்னுரை

15) பின்வருவனவற்றுள் அரைப்புள்ளி எது?
1. **,** 2. **:** 3. **;** 4. **’**

16) எண்பதாவது ஆண்டு நிரைவில் கொண்டாடப்படும் விழா ?
1.வைரவிழா 2.அமுதவிழா 3பொன்விழா 4.வெள்ளி விழா

17) “ மணமகளின் பெற்றோரால் சீதனம் வழங்கப்பட்டது” இங்கு சீதனம் என்பது
1.வரதட்சணை 2.சன்மானம் 3.நன்கொடை 4.மானியம்

18) கணையாழி என்பது?
1.காப்பு 2.மோதிரம் 3.சங்கிலி 4.மெட்டி

19) நளவெண்பாவை இயற்றியவர் யார்?
1.புகழேந்தி 2.கம்பர் 3.வான்மிகி 4.வியாசகர்

20) பின்வரும் வாக்கியங்களை ஒழுங்கான பந்தியாக அமைக்கும் முறை
அ.வீதிகளில் சந்து பொந்துகளில் வீடுகளில் எங்கெங்கும் இருட்டு.
ஆ.இப்போது இருள் விலகத் தொடங்கியது.
இ.இருட்டு கவிந்தது எங்கும் இருட்டு.
ஈ.இருட்டைப் பேக்குவதற்கு தற்காலிக ஏற்பாடுகளில் மக்கள் முனைந்தனர்.

1.இ ஈ ஆ அ 2.அ இ ஆ ஈ 3.ஈ ஆ இ அ 4.இ அ ஈ ஆ

(2×20=40 புள்ளிகள்)

## பகுதி 11

**(01) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. காட்டுவழிப் பாதையில் அச்சம் தரும் அம்சங்கள் 3 தருக ?
2. நேர்காணல் ஒன்றில் தவிர்க்கப்பட வேண்டிய அம்சங்கள் 3 தருக
3. சோழனது குதிரைப்படை என்பது எத்தனையாம் வேற்றுமை? இது உணர்த்தும் பொருள் யாது?
4. ஓர் எழுவாயும் ஓர் பயனிலையும் கொண்டமைந்த வாக்கியம் எவ்வாறு அழைக்கப்படும்? அதற்கு உதாரணம் தருக.
5. வியங்கோள் வாக்கியங்கள் எவ்வெப் பொருளில் வரும் என்பதை குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றிற்கும் உதாரணம் எழுதுக.

. (3×5=15 புள்ளிகள்)

**(02)** பின்வரும் தலைப்புகளுள் ஒன்றை தெரிவுசெய்து 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.

1. காடுகளைப் பாதுகாப்போம்.
2. இயற்கை உணவும் ஆரோக்கியமான வாழ்வும்.
3. கைத் தொலைபேசி விளையாட்டுகளும் மாணவர்களின் எதிர்கால வாழ்வும்.
4. ஒழுக்கம் உயர்வளிக்கும். (20 புள்ளிகள்)

**(03)**பின்வரும் விடயங்களில் ஒன்றை தெரிவு செய்து 75 சொற்கள் அமையுமாறு எழுதுக.

**(அ)**உமது பிரதேசத்திலுள்ள சுகாதார சீர்கேடுகள் காரணமாக தொற்றுநோய்கள் பலவும் பரவி வருகின்றன. அவற்றை தடுப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டி சுகாதார பிரிவு அதிகாரிக்கு கடிதம் எழுதுக.

**அல்லது**

**(ஆ)** “சூழல் சுத்தம் பேணி தொற்று நோய்களில் இருந்து விடுபடுவோம்” எனும் தொனிப்பொருளில் துண்டுப் பிரசுரம் .

(15 புள்ளிகள்)

**(04)**பினவரும் சொற்களை கொண்டு பொருள் விளங்க வாக்கியம் அமைக்க.

1. கலை -
2. மறை -
3. உன்னல் -
4. காழம் -
5. அரவு -

(2×5=10 புள்ளிகள்)